23.9.2024

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

# நீரை சிக்கனமாகப் பயன்படுத்தவும்: பினாங்கு அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது இருப்பினும் அது "பாதுகாப்பான" நிலையில் இல்லை

- **செப்டம்பரில் பெய்யும் மழை ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் உபயோகப்படுத்தக்கூடிய நீர் கொள்ளளவை உயர்த்துகிறது.**

- **இருப்பினும், இந்த 2 அணைகளின் இருப்பு அடுத்த வறண்ட பருவத்திற்கு முன் கணிசமாக உயர்ந்த அளவை எட்ட வேண்டும்.**

பினாங்கு, திங்கள், 23.9.2024: இந்த 2024 ஆண்டின் 8 வறண்ட மாதங்களுக்குப் பிறகு, ஆயர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் உபயோகப்படுத்தக்கூடிய நீர் கொள்ளளவு 1.9.2024 முதல் அதிக மழையுடன் நல்ல முன்னேற்றங்களைக் காட்டுகின்றன.

பினாங்கின் 3 முக்கிய அணைகளின் நிலையின் சுருக்கம் பின்வருமாறு:

| அணைகள் | அதிகபட்ச உபயோகப்படுத்தக் கூடிய திறன் (ML*) | உபயோகப்படுத்தக் கூடிய திறன் 23.9.2024 (%) | மழைப்பொழிவு (mm) 1.9.2024 - 23.9.2024 |
|---|---|---|---|
| **ஆயிர் ஈத்தாம் அணை** | **2,159** | **58.3** | **273.5** |
| **தெலுக் பஹாங் அணை** | **18,240** | **31.3** | **287** |
| **விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை** | **86,400** | **90.3** | **535** |
| * Million litres (மில்லியன் லிட்டர்) | | | |

3 அணைகளில், ஆயிர் ஈத்தாம் அணை 2,159 மில்லியன் லிட்டர் (ML) உபயோகப்படுத்தக்கூடிய "மிகச்சிறிய அணை" ஆகும். இது ஆயிர் ஈத்தாம், ஃபார்லிம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் உள்ள சுமார் 28,948 நீர் பயனீட்டாளர்களுக்குச் சேவை வழங்குகிறது.

2024, பிப்ரவரி முதல் PBAPP அதன் இருப்புக்களை "பாதுகாக்க" அதன் ஆயிர் ஈத்தாம் அணையின் செயல் திட்டத்தை 2024 (AIDAP 2024) செயல்படுத்தி வருகிறது. AIDAP 2024 இன் கீழ், சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (WTP) இருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரை ஒரு நாளைக்கு 33 மில்லியன் லிட்டர்

(MLD) வரை PBAPP ஆயிர் ஈத்தாம் அணையின் சேவைப் பகுதிக்கு அனுப்புகிறது. இத்திட்டம் இந்த அணையில் இருந்து தினசரி விநியோகத்தைக் குறைத்து, விரைவாக மறு நிரப்புதலை எளிதாக்குகிறது.

தெலுக் பஹாங் அணையானது அதிகபட்சமாக 18,240 ML (ஆயிர் ஈத்தாம் அணையின் 2,159 ML இல் 8.4x) உபயோகப்படுத்தக்கூடிய திறன் கொண்டது. தெலுக் பஹாங் அணையில் அதிக நீரை சேமிக்க முடியும் என்றாலும், இந்த அணையை நிரப்ப அதிக மழை தேவைப்படுப்படுகிறது. இது தெலுக் பஹாங், பத்து ஃபிரிங்கி, தஞ்சோங் பூங்கா மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் உள்ள சுமார் 45,850 பயனீட்டாளர்களுக்கு சேவை வழங்குகிறது.

தெலுக் பஹாங் அணை முதன்மையாக தெலுக் பஹாங் நீர் பிடிப்புப் பகுதியில் (WCA) பொழியும் மழையால் நிரப்பப்படுகிறது. மழைப் பருவங்களில் (தற்போதைய மழைப் பருவம் உட்பட), PBAPP, தெலுக் பஹாங் அணையை விரைவாக நிரப்ப, அருகிலுள்ள 2 WCAக்களான பத்து ஃபிரிங்கி WCA மற்றும் சுங்கை பினாங்கு WCA ஆகியவற்றிலிருந்து மூல நீரை பம்ப் செய்கிறது.

பெருநிலத்தில், விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையின் (EMD) இருப்புக்கள் கிட்டத்தட்ட உகந்த அளவை எட்டியுள்ளன. தற்போது, EMD முதன்மையான “பிரதான வறட்சி இருப்பு" மற்றும் "தற்செயல்" அணையாக செயல்படுகிறது. சுங்கை மூடா (பினாங்கின் முதன்மை மூல நீர் ஆதாரம்) இருந்து PBAPP போதுமான அளவு மூல நீரைப் பிரித்தெடுக்க முடியாத போதெல்லாம் அதன் இருப்புக்கள் சுங்கை டுவா WTP-க்கு அனுப்பப்படுகின்றன.

சுங்கை டுவா WTP-இலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீர் பினாங்கு மாநிலத்தில் உள்ள அனைத்து 5 மாவட்டங்களிலும், பெருநிலம் மற்றும் தீவு என மொத்தம் சுமார் 465,000 பயனீட்டாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

**அணையின் அடைவுநிலை (2024 செப்டம்பர்)**

2024 செப்டம்பரில், ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் WCA-களில் PBAPP அதிக மழையைப் பதிவு செய்துள்ளது. அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இருப்பினும், 23.9.2024 அன்று ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் உபயோகப்படுத்தக்கூடிய திறன் முறையே 58.3% மற்றும் 31.3% ஆகும். நாம் இன்னும் "பாதுகாப்பான நிலையை" அடையவில்லை.

2024, செப்டம்பர் முதல் டிசம்பர் வரை ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையை உகந்த முறையில் நிரப்புவது PBAPP இன் முதன்மைப் பணிகளில் ஒன்றாகும். இது பினாங்கில் அடுத்த வறண்ட பருவத்தை எதிர்நோக்குவதற்கான முயற்சியாகும். இது ஜனவரி 2025 முதல் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- மழைப்பொழிவு மற்றும் நீர்ப் பயன்பாடு அளவைப் பொறுத்து, ஆயிர் ஈத்தாம் அணையின் உபயோகப்படுத்தக்கூடிய திறன் இன்றைய 58.3% இலிருந்து டிசம்பர் 2024க்குள் 85% அல்லது அதற்கும் அதிகமாக அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

- தெலுக் பஹாங் அணையின் உபயோகப்படுத்தக்கூடிய திறன் இன்று முதல் 31.3% அல்லது 2024 டிசம்பரில் 80% அல்லது அதற்கும் அதிகமாக மேம்பாடு அடைய அதிக அளவு மழை தேவைப்படும்.

தெலுக் பஹாங் அணையின் 19,240ML உபயோகப்படுத்தக்கூடிய திறனுடன் ஒப்புடும் போது, ஆயிர் ஈத்தாம் அணையின் திறன் 2,159 ML ஆகும்.

ஆயர் ஈத்தாம் அணையை விரைவாக நிரப்புவதற்கு AIDAP 2024-ஐ PBAPP தொடர்ந்து செயல்படுத்தும்.

இதற்கிடையில், தீவின் வடமேற்குப் பகுதியில், 2025, ஜனவரிக்குள் தெலுக் பஹாங் அணையை நிரப்புவதற்கு PBAPP பத்து ஃபிரிங்கி மற்றும் சுங்கை பினாங்கு WCA-களில் இருந்து முடிந்த அளவு மூல நீரைப் பம்ப் செய்யும்.

அடுத்த 3 மாதங்களில் இந்த 2 அணைகளின் WCA-களில் பெய்யும் மழையின் அளவை துல்லியமாகக் கணிக்க முடியாது.

எனவே, பினாங்கில் உள்ள அனைத்து நீர் பயனீட்டாளர்களும் மழை பெய்தாலும் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு PBAPP அறிவுறுத்துகிறது.

நீர் சேமிப்புக் குறிப்புகளுக்கு, www.pba.com.my அகப்பக்கத்தைப் அணுகவும்

இந்த மழைப் பருவத்தில் ஆயர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் உபயோகப்படுத்தக்கூடிய திறன்களை உயர்த்துவதற்கான எங்கள் பணியை ஆதரிக்க உங்களால் முடிந்த ஆதரவை வழங்குங்கள். இதன் வாயிலாக, பினாங்கு அடுத்த வறட்சி காலத்திற்கு சிறப்பாக தயாராகும்.

நன்றி.

---


எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit

மின்னஞ்சல் : syarifah@pba.com.my